அமெரிக்காவின் அணுக்குண்டு பலத்துக்கு

‘அரோகரா’

‘மலையைக் கல்லி எலியைப் பிடிக்கும்’ மகத்தான ஆராய்ச்சி!

அணுசக்தி போட்டிப் பந்தயத்தில் சோவியத் வெற்றி

Phone No 4502
விலை அரை அணா

Regd. No.M. 5458
இலங்கை 5 சதம்

மாலை மணி

ஆசிரியர்: C.N. அண்ணாதுரை M.A.

MALAI MANI

(திராவிடர் தமிழ்த் தினசரி - கருத்திதழ்)

மலர் 1] சென்னை (3—2—50) வெளியூர் (4—2—50) [இதழ் 159

வேண்டும்போது—விரும்புமிடத்தில் வெடிக்கும் அணுக்குண்டு!

சோவியத் ரஷ்யா அணுக்குண்டு தயாரிக்கும் விதத்தைக் கண்டுபிடித்து ஏராள அணுக்குண்டுகளை உற்பத்தி செய்து வைத்திருக்கிறதென்பது மட்டுமல்ல; அணுக்குண்டை முறியடிக்கும் முறைகளையும் கண்டு பிடித்து விட்டதெனக் கூறப்படுகிறது. இவ்வண்ணம் அணுசக்தி பந்தயத்தில் ரஷ்யா, அமெரிக்காவைத்தோற்கடித்து விட்டது. இனி அப்பந்தயமென்றில்லை யென்ற அளவுக்கு ரஷ்யாவின் கை ஓங்கிவிட்டதாம் அணுசக்திக்கு எதிர்சக்தி தயாரிப்பதில் ரஷ்யா குறுக்குவழிபொன்றைக் கண்டு பிடித்துவிட்டது. ஹைட்ரஜன் சூப்பர் அணுக்குண்டு சக்தியினையும் சாதாரணமாக்கி விடக்கூடிய புதிய சக்தியைத் தயாரித்துவிட்டது ரஷ்யா. சூரியன் வல்லமையின் பெரும் பகுதியை விஞ்ஞான முறையில் சேர்ந்து உருவாக்கப் பெறுவதாம் இப்புதிய சக்தி.

அணுக் குண்டுகளைக் குவியல் குவியலாக ‘ஸ்டாக்’ செய்ய அமெரிக்கா அபரிமிதமான தொகைகளை அளவின்றி செலவிட்டு வருகிறது.” மலையைக் கிள்ளி எலியைப் பிடிக்கும் வேலையில் ஈடுபட்டுள்ளது” அமெரிக்கா என சோவியத் விஞ்ஞானிகளே கிண்டல் செய்யும் வகையில் அமெரிக்காவின் போக்கு இருந்து வர, மிக மிக சக்தி வாய்ந்த அதிதீவிர ஆயுதத்தை ரஷ்யா செலவு அதிகமின்றி தயாரிக்க முற்பட்டிருக்கிறது

இவ் வண்ணம் குறைந்த செலவில் உற்பத்தி செய்யக் கூடிய தீவிர சக்தி வாய்ந்த ஆயுத விஷயத்திலும், ரஷ்ய விஞ்ஞானிகள் மேலும் மேலும் ஆராய்ச்சி செய்து வருவதாகவும், இதன் உற்பத்திச் செலவை இன்னும் எளிதாக்க என்ன வழி யென்று கண்டறிந்து வருவதாகவும் கூறப்படுகிறது

எப்போது வேண்டுமோ, எந்த இடத்தில் வேண்டுமோ, அப்போது அந்த இடத்தில் அணுசக்தி பிரளயத்தை (வெடிப்பை) யுண்டாக்க சூரிய வெளிச்சத்தையும் ஒளி கதிர்களையும், பயன் படுத்திக்கொண்டு, உற்பத்திச் செலவை—செலவையே துப்புரவாகக் குறைத்துவிடலாமென்று ரஷ்ய விஞ்ஞானிகள் பல கருதியிருக்கிறார்களாம்.

அமெரிக்கா தனது போர்த் தந்திர முறைகளைத்திலும் முழு மாறுதல்களைச் செய்து கொள்ளவேண்டி நேரிட்டது. இத்தகைய கொடூர ஆயுதம் சோவியத் ரஷ்யாவின் கையில் சிக்கிக் கொண்டதால்தான்!

மூன்று மதங்களுக்குமுன்னர், அமெரிக்க திட்டமொன்று போட்டிருந்ததாம் கீழ்க் கோடியில் சமபவமொன்றை வலிய சிருஷ்டித்து. அதை யொட்டி, அணுக்குண்டு தணையைக்கொண்டு ரஷ்யா, சீனா, சோவியத் சாம்ராஜ்யம் ஆகியவற்றின் மீது பாய்வது! இதுவே அமெரிக்காவின் திட்டமாயிருந்தது.

மூன்றுவது உலகப்போரொன்றைத்துவக்கி, அது துவக்கப் பெற்ற பத்து நாட்களுக்குள்ளாக, பல்வேறு இன்றியமையாத கேந்திரப் பகுதிகளிலெல்லாம் ஐயாயிரம் அணுக்குண்டுகள் வரைப் பொழிந்து, ரஷ்யாவை இருந்த விடந்தெரியாமல் அழித்தொழித்து விடுவதென்ற அமெரிக்காவின் திட்டம் ‘அரோகரா’ ஆகிவிட்டது!

சர்வதேச பாங்கி பயிற்சித் திட்டம்

நியூயார்க், பிப். 2—

சர்வதேசபாங்கி அளிக்கும் பயிற்சிக்கு இவ்வாண்டு எட்டுநாடுகளிலிருந்து ஆட்கள் பொறுக்கி எடுக்கப்பட்டிருக்கிறார்கள். இப்பயிற்சி சென்ற ஆண்டுதான் ஆரம்பமாயிற்று. இப்பயிற்சியை வாஷிங்டனில் ஒரு ஆண்டுகாலம் பெற்றதேர்ந்தவர்கள் பாங்கியில் வேலைக்கு எடுத்துக் கொள்ளப்படுவர். இந்தப் பயிற்சிக்கு இந்தியாவிலிருந்து தோழர் கிருஷ்ணமோகன் என்னும்வாலிபர் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்.

லண்டனில் சர். ஏ. இராமசாமி

லண்டன், பிப். 1—

யூனெஸ்கோவின்இந்தியக்குழுத் தலைவரான சர். ஏ. இராமசாமி நேற்று பம்பாயிலிருந்து விமான மூலம் இங்கு வந்து சேர்ந்தார். அவர் சில நாட்கள் லண்டனில் தங்கிவிட்டு, பிப்ரவரி 7-ந்தேதி லேக்ஸக்ஸஸ் செல்கிறார். யூனெஸ்கோ செஷன் 5 வாரங்களுக்குமேல் நடைபெறும் என்று, தான் எதிர்பார்ப்பதாக அவர் கூறினர்.

வேகமாக விமானம் ஓட்டுவதால் ஏற்படும் விளைவு

லண்டன், பிப் 2—

வேகமாக விமானங்களை ஓட்டுவதால் விமானிகளின் குணமும் தன்மையும் மாறிவிடுகிறதென்பதை டாக்டர் ஸ்லேட்டர் ஒரு கட்டுரை மூலம் எச்சரித்திருக்கிறார். வேகமாக விமானங்களை ஓட்டுவோர்களின் மூளை பாதிக்கப்படுகிறது என்றும், தலையில் பலத்த அடிபட்டவர் ஒருவர் என்ன நிலைமையில் இருப்பாரோ, அந்த நிலைமையில் இந்த விமானியும் இருப்பார் என்று அவர் எழுதுகிறார்.

உயிரைப் பாதுகாக்கும் அரிய மருந்துகள்!

கான்பெர்ரா, பிப். 2—

உயிரைப்பாதுகாக்கவல்ல அபூர்வ மருந்துகளான பென்ஸிலின் இன்ஸுலின் ஸல்பானிலமைட் முதலியவைகளை டாக்டர்கள் சர்டிபிகேட் பேரில் இலவசமாககொடுத்து வர ஆஸ்திரேலியாவில் ஒரு திட்டம் வகுக்கப்பட்டிருக்கிறது. இந்த அபூர்வ மருந்துகளை வீணாகப் பயனின்றி துஷ்பிரயோகம் செய்வதைபோக்க ஒரு கமிட்டி ஏற்படுத்தப்படும்.

கடவுளாலயங்கள் செருப்புக் கடைகளாக்கப்படுகின்றன!

(o)

சீக்கிய-இந்துக் கோவில்கள் செருப்புக் கிடங்குகளாகின்றனவே!

(o)

பாகிஸ்தானில் நிலவரம் பற்றி இந்திய சட்டசபை

கராச்சியிலிருந்த சீக்கிய-இந்துமத வழிபாட்டு இடங்களெல்லாம் செருப்புக் கடையாகவும், செருப்புத் தொழிற்சாலையாகவும், சாப்பாடு ஓட்டலாகவும் மாற்றப்பட்டு விட்டன வென்பது உண்மையா என்று, சர்தார் போபிந்தர் சிங்மான் பெப்ரவரி 1-ந்தேதியன்று இந்தியப் பாராளுமன்றத்தில் கேள்வியொன்று கேட்டார்.

இதற்குப் பதிலளித்த தோழர் மோகன்லால் சக்ஸேனா இதுவரை இது பற்றி இந்திய சர்க்கார் கவனத்துக்கு 800 சம்பவங்கள்வரை வந்துள்ளனவென்றும், பாகிஸ்தானில் டொமினியன் ஒப்பந்த ஷரத்துக்கள் இவ்வகையில் பெரிதும் மீறப்பட்டிருக்கின்றனவென்றும், இதுபற்றி இரு சர்க்கார்களுக்குமிடையே கடிதப் போக்குவரத்து நடைபெற்று வருகிறதென்றும் அவர் தெரிவித்தார்.

குருதுவாரங்கள், கோயில்கள் ஆகியவற்றுக் குரிய சொத்தை அகதிகள் சொத்து என்றோ, கைப்பற்றிக்கொள்ள வேண்டிய சொத்து என்றோ பிரகடனப் படுத்துவது கூடாதென்று டொமினியன் ஒப்பந்தமிருக்க, பாகிஸ்தான் அதனை மீறியிருக்கிறதென்பது உண்மையா எனத் தோழர் மான் கேட்டதற்கு, பெருத்த அளவில் பாகிஸ்தான் அவ் வண்ணம் மீறியே இருக்கிறதென தோழர் சக்ஸேனா பதிலளித்தார்.

ரயில்வே நிலையங்களில் போலி ஸ்டேஷன் மாஸ்டர்கள்!

சமீப காலத்தில் சர்க்கார் ரயில்வேயில் சில போலி ஸ்டேஷன் மாஸ்டர்கள் நிஜமான ஸ்டேஷன் மாஸ்டர்கள் என்று பொய்கையொப்பமும் ஆர்டர்களும் மேல் அதிகாரிகளிடமிருந்து தாங்கள் பெற்றதுபோல் நடித்துவிட்டு அன்றாடம் பெற்றுள்ள ரயில்வே வருமானத்தை அவர்கள் எடுத்துச் சென்றிருப்பதாக சில புகார்கள் வந்துள்ளன.

இனி இம்மாதிரி சம்பவங்கள் ஏற்படாமல் தடுப்பதற்கு இந்திய சர்க்கார் ரயில்வே அதிகாரிகள், ஸ்டேஷன் மாஸ்டர்களுக்கும், “கூட்ஸ் ஸ்டேஷன் மாஸ்டர்களுக்கும், ஸ்டேஷனை விட்டு வேலை பார்க்காக நேரிடும் பதிலாளுக்கும் விடுத்துள்ள ஒரு சுற்றறிக்கையில் சில யோசனைகள் கூறியுள்ளனர்.

லண்டன், பிப் 2—

ஹேமிமின் சர்க்காரை ரஷ்யா அங்கீகரித்தது குறித்து பிரிட்டிஷ் அயல்நாட்டிலாகா எவ்வித அபிப்பிராயம் கூற மறுத்துவிட்டது.

சீன மக்கள் தொகையைக் ‘குறைக்க’த் திட்டம்

(o)

ஐம்பதுகோடியைநாற்பதாக்க முடிவாம்

(o)

ஸ்டாலின் யோசனைக்கு மா-சே-துங் இணங்குவாரா?

மாஸ்கோவில் சோவியத் ரஷ்யாத் தலைவர் ஸ்டாலினும், சீனத் தலைவர் மாசேதுங்கும் பேச்சு வார்த்தை நடத்தியதின் விளைவாக, சீன மக்கள் தொகையில் 10 கோடியைக் ‘குறைக்கு’மளவுக்கானத் திட்டமொன்று தயாராகலாமென நம்பப் படுகிறது. வாஷிங்டனுக்குக் கிடைத்துள்ள தகவலொன்றின்படி இச்செய்தி வெளியிடப்பெறுகிறது.

இப்போது மாஸ்கோவில் நடைபெறும் சீன—ரஷ்ய ரகசியப் பேச்சு வார்த்தைகள் எதனையொட்டியதாயிருக்கலாமென்று எழுந்திருக்கும் பல்வேறு வதந்திகளில் இதுவொன்றாகக் காதப்படுகிறது. சீனாவின் 50 கோடி மக்கள் தொகையில் 10 கோடியைக் ‘குறைக்க’வேண்டுமென ரஷ்யா யோசனை கூறியிருப்பதாக நம்பப்படுகிறது. இப்போது அங்குக் கிடைக்கக்கூடிய வளப்பம் வசதிகளைக் கொண்டு அத்தனை கோடி மக்களையும் புரக்க முடியாதென்ற பொருளாதாரக் கொள்கையை அனுசரித்தே, ஸ்டாலின் இவ்யோசனையைக் கூறியுள்ளாராம்.

இப்படி மக்கள் தொகைக் ‘குறைப்பை’ எப்படிச் செய்வதென்பது பற்றித் தகவலெதுவும் கிட்டவில்லையாம். ஆனால் அரசியலறிஞர்கள் இரு முறைகளைக் கூறுகின்றனர் ஒன்று சைபீரியாவில் சோவியத் பாதுகாப்புத் தளங்களில் பணியாற்ற 500,000 பேர்களை சீனாவிலிருந்து அனுப்புமாறு ரஷ்யா கேட்டிருப்பதாகக் கூறப்படுகிறது.

இரண்டு, சீனக்கம்யூனிஸ்டுகளிடையே காணப்படும் பொறுப்பற்ற நம்பிக்கையற்ற அரசியல் வாதிகளைப் பெருத்த அளவில் வெளியேற்றுகிறது.

கீழ்க்கோடிப்பகுதிகளில் சோவியத் ஆதிக்கத்தை விஸ்தரித்துக் கொள்ள சோவியத் உதவிப் பிரதமர் மாலட்டோவ் ஓராண்டுகாலமாகவே சிந்தித்து ஏற்பாடு செய்த நாடே இப்போது நடைபெறுகிறதாம். கீழ்க்கோடி நாடுகளனைத்தையும் மாஸ்கோவின் ஆதிக்கத்தின் கீழ் கம்யூனிஸ்[illegible] ராஜ்யமாக்குவதேமாலட்[illegible] நோக்கமென்றும் வாஷி[illegible] கருதப்படுகிறது.

மாலை மணி

சென்னை 3—2—50 வெள்ளிக்கிழமை

அநீதித் தீர்ப்பு!

"சேலை இல்லை என்று சிற்றன்னை வீட்டிற்குச் சென்றாளாம் அவள் ஈச்சம் பாயைக் கட்டிக்கொண்டு எதிரே வந்தாளாம்" என்ற பழமொழிக்கிணங்க, சென்னை மாகாண அரசாங்கம் பணம் வேண்டி மத்திய அரசாங்கத்திடம் செல்லும்போதெல்லாம் மத்திய அரசாங்கம் சிற்றன்னைக் கோலத்திலேயே காட்சியளிக்கிறது!

பணம் வேண்டி சென்னை அரசாங்கம் இரு கையேந்திக் கெஞ்சியவண்ணம் செல்கிறது; அதற்கு மத்திய அரசாங்கம் இருகை விரித்து ஆணவத்தோடு பதிலிறுக்கிறது பணம் இல்லை என்று.

சென்னை அரசாங்கம் ஏராளமான பணத்தைப் பல்வேறு வரிகள்மூலம் குவித்துக் கொட்டிக் கொடுத்திருக்கிறோம், ஆகவே அதில் பங்கு கேட்பது தமது உரிமையின்பாற்பட்டது, என்று நினைத்துக்கொண்டு, உரிமை எண்ணத்தோடு பங்குப் பணம் கேட்கிறது. அதற்கு மத்திய அரசாங்கம், கொடுக்கத்தான் உனக்கு உரிமையிருக்கிறதே தவிர பங்கு கேட்கும் உரிமை உன்னுடையதல்ல. எவ்வளவு கொடுக்கவேண்டும் கொடுக்க முடியும்—கொடுக்கலாம் என்பது பற்றி முடிவு செய்யும் உரிமை எங்கள்பால் இருக்கிறது, என்று ஆணவத்தோடு பதிலிறுக்கிறது எதிர்த்துக் கேட்க சென்னை அரசாங்கத்துக்கு உரிமையில்லை; அந்த அளவுக்குத்தான் மாகாண அரசாங்கம் மத்திய அரசாங்கத்திடம் அடிமைப்பட்டுக்கிடக்கிறதே!

சென்னை அரசாங்கம் அண்மையில் பங்குத் தொகையில் அதிக விகிதம் வேண்டும் என்று கேட்பதைக்கூட நிறுத்திவிட்டு, ஆறு கோடி ரூபாய் கடனாகவாவது கொடுத்துதவுங்கள் என்று மத்திய ஆட்சியாளரைக் கேட்டிருந்தது. அதற்கும் இசைய மறுத்துவிட்டது மத்திய அரசாங்கம்! மத்திய அரசாங்கம் என்றால் வடநாட்டையே பெரிதென மதிக்கும் வடநாட்டவரின் ஆதிக்கம் அதிகம் நிறைந்துள்ள அரசாங்கம் நீட்டிய அடிமை சாசனத்தில் விரைந்தோடிக் கையெழுத்திட இன்றைய சென்னை மாகாண அரசாங்கம் தயாராக இருக்கும்போது, இதுவும் நடக்கும், இதற்கு மேலும் நடக்கும்! நாட்டின் பொருளாதார நிலையை நன்கு உணரும் நாம் இது கண்டு அவதியுறுகிறோம்; ஆனால் ஆட்சியாளரோ இந்த அடிமை மாகாண அரசாங்க வாழ்வை ஆனந்தத்தின் இருப்பிடமாகக் கருதுகின்றனர்!

மத்திய அரசாங்கத்திற்குச் சென்னை மாகாணம் கொட்டிக் கொடுக்கும் தொகையையும், மத்திய அரசாங்கம் பின்பு திருப்பி அளிக்கும் தொகையையும் ஒப்பிட்டுப்பார்த்தால், மலைக்கும் மடுவுக்கும் உள்ள வேறுபாடு இருக்கக் காணலாம். சென்னை மாகாணம் இப்பொழுது பெற்றுவரும் பங்கைவிட அதிகப்படியான பங்கை, மத்திய அரசாங்கத்திடம் பெறவேண்டியிருக்கிறது என்பதைச் சென்னை நிதி அமைச்சர் தோழர் கோபாலர் அவர்கள் பல கூட்டங்களில் கூறியும், பல தாள்களில் எழுதியும்வருகிறார். எனினும் நிதி அமைச்சரின் கூக்குரல் மத்திய அரசாங்கத்தின் செவியில் விழுந்ததாகத் தெரியவில்லை; விழும்படி காதைத் திருப்பி வைத்துக்கொள்ள விரும்புவதாகவும் தெரியவில்லை!

"ஊருக்கு இளைத்தவன் பிள்ளையார் கோயில் ஆண்டி" என்ற மொழிக்கிணங்க, இந்தியத் துணைக் கண்டத்தில் இளைத்த பகுதியாகக் கருதப்பட்டுவருவது சென்னை மாகாணம்; அதாவது திராவிடந்தான் என்பது மத்திய ஆட்சியாளரின் நடவடிக்கைகளால் இனிது விளங்கும். மத்திய அரசாங்கத்தைச் சேரும் மொத்த வருமான வரியில் சென்னை மாகாணம் பெறவேண்டிய விகிதாசாரம் எவ்வளவு என்பதை வடநாட்டுத் தோழர் சிந்தாமணி தேஷ்முக் தீர்ப்பு செய்திருப்பதைக் கவனித்தால், வடநாடு தென்னாட்டை நோக்கும் 'திருப்பார்வை' எப்படி அமைந்திருக்கிறது என்பதை எளிதில் உணர்ந்துகொள்ளலாம்.

நிதி அமைச்சர் கோபாலர் பலதடவை வற்புறுத்தி, மறுக்கமாட்டாத முறையில் எடுத்து விளக்கியிருந்தும் திராவிடத்தைச் சேர்ந்த பேரறிஞர்கள் விளக்கிக் காட்டியிருந்தும், வருமான வரியில் சென்னை மாகாணம் பெறவேண்டிய பங்கு 17½ சதவிகிதம் என்றும், பம்பாய் மாகாணம் பெறவேண்டிய பங்கு 21 சதவிகிதம் என்றும் தோழர் தேஷ்முக் தீர்ப்பளிக்க, மத்திய அரசாங்கம் அதனை ஏற்றுக்கொண்டு ஏப்ரலிலிருந்து அமுலுக்குக் கொண்டுவரத் திட்டமிட்டிருக்கிறது என்றால், வடநாட்டு ஆட்சியில் தென்னாடு பெறும் நீதிமுறைமை எப்படிப்பட்டதாக இருக்கும் என்பதைத்தனே விளக்குகிறது. இப்படிப்பட்டத்தன்மையை நாம் எடுத்துக் கூறும்போதெல்லாம், நம்மீது சீறிச்சினங் கொள்ளத் தேசியத் தோழர்கள் தயங்குவதில்லை. 17½-க்கும் 21-க்கும் இடையே பொதிந்துகிடக்கும் வடநாட்டார் நீதியைப்பற்றி, என்ன சொல்லத் துணிகிறார்கள் என்று கேட்க ஆசைப்படுகிறோம்.

1936-ல் தோழர் நிமேயர் அளித்த தீர்ப்புப்படி மொத்த வருமான வரியில் 15 சதவிகிதமே [illegible] பெறுவதெனவும், 20 சதவிகிதம் பம்பாய் பெறுவது எனவும், அநீதி வழங்கப்பட்டது. அப்பொழுது சென்னை மாகாணத்தின் மக்கள் எண்ணிக்கை 4 கோடியே 40 லட்சம்; பம்பாய் மாகாணத்தின் எண்ணிக்கை 1 கோடியே 80 லட்சம். நாலரை கோடி மக்கள் வாழும் மாகாணத்துக்கு 15 சதவிகிதம்; ஒன்றேமுக்கால் கோடி மக்கள் வாழும் பம்பாய் மாகாணத்துக்கு 20 சதவிகிதம்! இப்படிப்பட்டதாகஇழைக்கப்படும் அநீதியை ஏன் தேசீயத்தோழர்கள் உணர மறுக்கிறார்கள்!

1947-ல் பாக்—இந்தியா பிரிவினைக்குப்பிறகு சென்னைக்கு 18 சதவிகிதம் என்று தீர்ப்பு செய்யப்பட்டது. 18 சதவிகிதம் என்று விகிதாசாரம் உயர்த்தப்பட்டதேயொழிய, கிடைத்த தொகை அதற்கு முன்பு எவ்வளவு கிடைத்துவந்ததோ அவ்வளவேதான்!

அந்த 18 சதவிகிதம் பங்கிலிருந்து இப்பொழுது தோழர் தேஷ்முக் ½ சதவிகிதம் குறைத்து 17½ சதவிகிதமாக வழங்கத் தீர்ப்பு அளித்துள்ளார்.

மக்கள் எண்ணிக்கையை அதிகமாகக்கொண்ட—மத்திய அரசாங்கத்திற்கு அதிகமான அளவு வரிப்பணத்தைக்கொட்டிக் கொடுக்கிற சென்னை மாகாணம், அதாவது திராவிடம், புறக்கணிக்கப்படுகிறது; அதற்கு அநீதி வழங்கப்படுகிறது; அடிமை நிலையில் தாழ்த்தி வைக்கப்படுகிறது. இந்தக் கொடுமைகளை உணரும் அளவுக்கு மானமும், உரிமையைக் கோரி நிற்கும் அளவுக்கு உறுதியும், அதற்காகப் போரிடும் அளவுக்கு வீரமும் இங்கு அளவடும் அன்பர்களிடத்திலே என்று அமைந்திருக்கின்றனவோ, அன்றுதான் தேய்ந்து வரும் திராவிடம் திகழ வழி ஏற்படும்!

இதனை திராவிடத்திலுள்ள மக்கள் இப்பொழுது உணராவிட்டாலும், தேஷ்முக் போன்றார் கொடுக்கும் இடிகளையும் அடிகளையும் வாங்கிக்கொண்டு உணர்வு பெற்ற நிலையில், சிந்தித்து, நாம் கூறும் வழியில் செயலாற்ற முற்படுவார்கள் என்பது திண்ணம். ஆகவேதான் தெளிவு பெற்றுள்ள நாம், தெளிவு பெறாத தேசீயத் தோழர்களுக்கு இப்படிப்பட்ட அநீதித் தீர்ப்புகளைக் காணிக்கையாக எடுத்துத் தந்து கொண்டிருக்கிறோம்!

அறிவுக் கதிர்!

மக்களின் சர்க்கார் என்ற கொள்கை சரிதான். ஆனால் "மக்களால் நடத்தப்படும் சர்க்கார்" என்பது சரியல்ல. அரசாட்சியை நடத்தத் தகுதி பெற்றவர்கள் என்று புடம் போட்டுப் பொறுக்கியெடுத்த நபர்களை மக்கள் தேர்ந்தெடுத்து, அந்த நபர்களைக் கொண்ட மந்திரி சபைகள் மூலமே ஆட்சியை நடத்த வேண்டும்.

— பெர்னார்ட்ஷா

ஹோசிமின் சர்க்காருக்கு ரஷ்யா அங்கீகாரம்

(0)

மேற்கு வல்லரசுகள் கவலை

லண்டன், பிப். 2—

ஹோசிமின் சர்க்காரை ரஷியா அங்கீகரித்தது மேற்கு வல்லரசுகளின் தலைநகர்களில் பெரும் கவலையை ஏற்படுத்தியிருக்கிறது. தென்கிழக்கு ஆசியாவில் கம்யூனிசத்தைப் பரவச்செய்ய இது முதல் படி என்று பாரிசில் கூறப்படுகிறது.

பிரிட்டிஷ் பத்திரிகைகள் பீதி எதையும் தெரிவிக்காவிட்டாலும், இதனால் பெரும் விளைவுகள் ஏற்படலாம் என்பதை மறுக்கவில்லை.

பாவ்டே சர்க்காரை, பிரிட்டனும் யுனைடெட் ஸ்டேட்ஸும் அங்கீகரிப்பதற்கு இது போட்டி நடவடிக்கையாக இருக்கலாம் என்றும். இந்தோசீன தகராறில் ரஷ்யா தலையிடுவது கவலைதரக்கூடிய விஷயமே என்றும் லண்டன் டைம்ஸ் எழுதுகிறது.

மாஞ்செஸ்டர் கார்டியனில் அதன் ராஜதந்திர நிருபர் பின்வருமாறு எழுதியிருக்கிறார்:—ஹோசிமின் சர்க்காரை இந்தியா அங்கீகரிக்கும் என்பதற்கான அறிகுறிகள் எதுவும் காணப்படவில்லை. ஹோசிமின் பாவ்டேய்க்குப் போட்டியாக ஆதரவை இழந்துவிடுவார் என்ற அச்சத்தின் பேரில் ரஷ்யா எதுவும் செய்ததாகத் தெரியவில்லை. பாவ்டே சர்க்காருக்கு அதிகாரமாற்றம் செய்திருப்பதில் அயல்நாட்டுக்கொள்கை விஷயத்தையும், பாதுகாப்பு விஷயத்தையும் பிரான்ஸ் இன்னும் விடாப்பிடியாக வைத்துக்கொண்டிருக்கிறது. ஹோசிமின்னின் சுதந்திர இயக்கத்தைத் தடுக்க உள்ள ஒரேவழி, பாவ்டே சர்க்காருக்கு மேலும் சில அதிகாரங்களை பிரான்ஸ் கொடுப்பதேயாகும்.

வட ஆர்க்காடு மாவட்ட தி. மு. க. தேர்தல் கூட்டம்

5—2—50 மாலை 3-மணிக்கு திருவண்ணாமலையில் அமைப்புக்குழுச் செயலாளர் தோழர் என். வி. நடராசன் தலைமையில் நடைபெறும். மாவட்டத்திலுள்ள எல்லா கிளைக் கழகத்திலிருந்தும் இரண்டு பிரதிநிதிகள் வீதம் மேற்படி கூட்டத்திற்கு அனுப்பிவைக்குமாறும். இதையே அழைப்பாகக் கொள்ளுமாறும் கேட்டுக்கொள்கிறேன்.

எம். நடேசன்,
அமைப்பாளர்,
வட ஆர்க்காடு.

வரதட்சணைமீது வரி!

சென்னை அரசாங்க நிதிக் குழுத் தலைவரான தோழர் பி. கே. வாட்டால் தலைமையில் கூடிய நிதி விசாரணைக் கூட்டத்தில், முனிசிபாலிட்டிகள் ஆங்காங்கு நடைபெறும் திருமணங்களில் மணமகன்வீட்டாருக்கு மணமகள் வீட்டார் வரதட்சணை என்ற முறையில் அளிக்கும் பணத்துக்கு வரி போட்டால், வருவாய்க்கு அதுவொரு வழியாக இருக்கக்கூடும் என்ற கருத்து தெரிவிக்கப்பட்டது.

இரயில்வேத் திட்டங்கள் ஏட்டளவிலேயே இருக்கும்

தெ. இ. ர. நிர்வாகி கை விரிப்பு!

சென்னை, பிப். 2—

1952-ஆண்டிற்கு முன்பு தென்னிந்திய ரயில்வேயில் பெரும் திட்டங்களை அமுல் செய்ய இயலாது ஏனெனில் அதற்கு வேண்டிய பணவசதி இல்லை என்று தென்னிந்திய ரயில்வே ஜெனரல் மானேஜர் தோழர் கே. ஆர். ராமானுஜம் கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது:—நாட்டிலே சில சிறுபான்மையோர் சமூகத்திற்கு விரோதமான காரியங்களைச் செய்து வருகின்றனர்! அவை ரயில்வே கட்டிடங்களுக்குத் தீ வைத்தல் "ஸ்லீபர்களை" பிடுங்கிவிடுதல் போன்றவை சமீப காலத்தில் அதிகரித்துவிட்டன. இவைதச் செய்யாமல் தடுப்பதற்கும், பொதுமக்களின் ஆதரவைப்பெறுவதற்கும பத்திரிகைகள் பிரசாரம் செய்ய வேண்டும்.

இனிவரும் ஆண்டுகளில்ரயில்வேயில போடடுள்ள சில திட்டங்களை நடத்துவதற்கு ரூ. 3,00,000.00 லிருந்து ரூ. 75,000.00க்குக் குறைத்துவிடப்பட்டுள்ளது. இது கால் பங்கு குறைவு. ஆனால பிரயாணிகளுக்கு சுகமளிக்க வேண்டியமுறைகளில என்னென்ன கையாளவேண்டுமோ, அவைகளுக்கென்று ஒதுக்கப்பட்ட தொகையை ஒருக்காலும் குறைக்கப்போவதில்லை.

மின்சார வண்டியில் இரண்டாவது வகுப்பு ஏற்படுத்தப்போவதைப் பற்றி கேட்டபொழுது, இவ்விஷயத்தை ரயில்வே போர்ட்டுக்கு அறிவித்திருப்பதாகவும் போர்ட்டு அதைப்பற்றி ஆலோசித்துவருவதாகவும் கூறினார்.

ரயில்களில் வரவர கூட்டம் அதிகரித்திருக்கிறது. இதைத் தடுக்க ரயில்வே அதிகாரிகள் என்ன செய்யப் போகிறார்கள் என்று நிருபர் கேட்டார்.

1938-ஆம் ஆண்டிலிருந்து இதுவரை ரயில்வே நடமாட்டம் இரட்டித்திருக்கின்றது. சாதாரணமாக ஒரு பங்கு வேலைசெய்தஎன்ஜின் இப்பொழுது இரண்டு பங்கு அதிகமாக வேலை செய்யநேரிட்டதின்பேரில், கூட்டம் அதிகரித்திருப்பதைத் தடுப்பது சற்றுகஷ்டம் தான், என்று தோழர் ராமானுஜம் கூறினார்.

ரயில்வேயில் பிச்சைக்காரர்களின் தொந்தரவு நீக்க வேண்டுமென்றால், பொதுமக்கள் ஆதரவு இருந்தால் இப்பிரச்னை 2 வாரத்தில் தீர்ந்துவிடும் என்பதைத்தான் நம்புவதாக ஜெனரல் மானேஜர் அறிவித்தார்.

ஆஸ்திரேலிய கால் நடைகள்

இந்தியா வாங்கும்

கான்பெர்ரா, பிப். 2—

ஆஸ்திரேலியாவில் குவீன்ஸ்லாந்து பகுதியில் வளர்க்கப்படும் 'அயார்ஷயர்' கால் நடைகளை வாங்குவதில் இந்தியர் மிகவும் சிரத்தைக் காட்டி வருகின்றனர். இப்பசுக்கள் ஏராளமாக பால் தருகின்றனவாம்.

குவீன்ஸ்லாந்திற்கு வந்த இந்திய சர்க்கார் பிரதிநிதி ஒருவர் கூறுகையில, இதுவரை இந்தியா ஸ்காட்லாந்திலிருந்து அயர்ஷயர் கால் நடைகளைத் தருவித்து வந்ததென்றும், ஆனால் குளிர்ச்சி சீதோஷ்ணமுள்ள ஸ்காட்லாந்திலிருந்துவரும் பசுக்களுக்கு இந்திய தட்பவெப்ப நிலை ஒத்துக்கொள்ள சில காலம் பிடிக்கிறதென்றும் குவீன்ஸ்லாந்து தட்பவெப்ப நிலைமை குளிர் இல்லாமல் இருப்பதால், இனி கால் நடைகளை இங்கிருந்தே இந்தியா பெற்றுக் கொள்ளலாம் என்று கூறினார்.

நடமாடும் பல்கலைக் கழகம், நாம்!

மூச்சுரிமையும் போய்விடும், இன்றையக் குடியரசில்!

திருவாரூரில் தோழர்கள் கருணாநிதி, அரங்கண்ணல்

திருவாரூர், ஜன. 17 — நேற்று மாலை திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் பொங்கல் விழா பொதுக் கூட்டம் நகரசபைக்கு எதிரில் தெற்கு வீதி முனையில் சிறப்புடன் நடை பெற்றது. தோழர் காணை எம். ஜமால் தலைமைவகித்தார்.

ஜமால்

தனது தலைமையுரையில் பொங்கல் விழாவின் சிறப்பினைப் பற்றிக் குறிப்பிட்டு "ஒரு சாரார் ஆதிக்கம், நாட்டில் ஏற்பட்ட காரணத்தால் அவர்கள் தங்கள் ஆதிக்கம், திராவிடப் பெருங்குடி மக்களிடம் ஏற்பட வேண்டும் என்ற எண்ணத்தால் சிருஷ்டித்த ஏனைய விழாக்களைப் போன்றதல்ல, இந்தப் பொங்கல் விழா! உழைப்பின் விழா, உழவரின் விழா!" என்று குறிப்பிட்டார்.

அரங்கண்ணல்

அடுத்து தோழர் இராம அரங்கண்ணல் "அரசியல் வாழ்வின் அரிச்சுவடியை என் கையிலே தந்த, நமது நகரிலே, முதல் முதலாக, இப்போதுதான், இங்குகுழுமியிருக்கும் பொது மக்களாகிய உங்களைப் பொதுமேடையிலிருந்து சந்திக்கிறேன். நான் படித்து மகிழ்ந்த பள்ளி இதோ அருகில் எனது பள்ளிப் பருவத்தை நினைவூட்டுவதுபோல இருக்கிறது. என்னுடன் மகிழ்ந்து குலாவிய மாணவ மணிகள், அணைத்து ஆதரவுதந்த ஆசிரியர்கள், மகிழ்ச்சியுடன் ஆதரித்த பெரியோர்கள் எல்லாம் இங்கு கூடியுள்ளீர்கள்! உங்களை இன்று இந்நிலையில் காணும் பொழுது என்னுள்ளம் பூரிக்கிறது!" என்று குறிப்பிட்டு விட்டு, தற்போதைய ஆளவர்தாரின் நிலையையும், அவர்கள் நடத்தையும் பற்றி பேசுகையில், "ஜனவரி 26-ந் தேதி வந்துகொண்டிருக்கிறது! இந்தியா குடியரசு என்று அன்று முதல் பிரகடனம் ஆகிவிடும். உலகம் ஒரு விசித்திரச் சோலை! நிமிடத்துக்கு நிமிடம் நிகழ்ச்சிகள் சரித்திர ஏடுகளாக மாறிக்கொண்டிருக்கின்றன. டச்சு ஆதிபத்தியத்தின் பிடியிலே சிக்கிக்கிடந்த இந்தோனேஷியா, இதோ சுதந்திர நாடாகிவிட்டது! சீனாவின் முடிசூடா மன்னர் சிங்க நெஞ்சன் என்று புகழ்ந்து போற்றப்பட்ட சியாங்-கேய்-ஷேக் ஆட்சி அஸ்தமித்து, மா-சே-துங் என்ற இளந் தளபதியின் எண்ணங்கள், ஆசைக் கனவுகள், நனவுகளாக கம்யூனிஸ்ட் சீனா உதயமாகிவிட்டது பெருமையும் பூரிப்பும் கொண்டிருந்த ஜப்பான்—விதவைக் கோலத்தில்! பர்மாவிலே—பதட்டம், பதை பதைப்பு—போர்—ரணகளம்! அதற்கு அருகிலுள்ள இந்தோசீனாவிலே—பாவே தாய் என்ற ஒரு பழைமையின் சின்னத்தை, மாஜி மன்னனை பிரெஞ்சு ஏகாதிபத்யம் தனது பொம்மையாக வைத்து புது சர்க்காரை நிறுவியிருக்கிறது. எப்படிப்பட்ட நேரத்தில்? ஹோ-சி-மின் என்கிற ஒரு இளம் இதயத்தான், இரணகளச் சூரன், 'விடுதலை' விடுதலை' என்று முழக்கமிட்டு, முதலாளிகளின் கையில், மூர்க்க முதலைகளாம் அந்நிய ஆதிபத்தியத்தின் பிடியில் இருந்து விடுவிப்பேன் என்று முரசொலி எழுப்பி, போட்டி சர்க்கார் ஏற்படுத்தி வெற்றி கண்டுகொண்டிருக்கும் நேரத்தில்! திபெத்திலே குழப்பம்! நேபாளத்திலே நெருக்கடி!

இந்நிலையில், உலகம் இருக்கிறது. இந்த நிகழ்ச்சிகளில், ஏதாவது இங்குள்ள பெரியோர்களுக்குத் தெரியுமா? தெரியாது—குற்றம் அவர்களுடைய து மட்டுமல்ல' பொதுச் சேவை புரிகிறோம் என்றுகூறி, வோட்டுப் பெற்று, ஆளவந்தார்கள் ஆனவர்கள், மக்கள் மன்றத்தை அறிவுமேடையாக ஆக்கவில்லை! நான் மந்திரிமார்கள் மீது குற்றம் சாட்டவில்லை, 'எனப்'களாகிய எம். எல். ஏக்கள் மீது கூட அல்ல மக்களுக்காக உழைக்கிறோம், அதுதான் எங்கள் கட்சி என்று கூறி வரும் காங்கிரஸ் பிரச்சாரகர்கள் செய்தார்களா? செய்ய முற்பட்டார்களா? அகில உலகத்தைப் பற்றிகூட அல்ல, இந்தியாவின் தலைவிதியை நிர்ணயித்திருக்கிறார்களே அதைப்பற்றி - இந்திய அரசியலமைப்பைப் பற்றி-எடுத்துச் சொன்னார்களா? இந்தியா குடியரசாகப் போகிறது என்று சொன்னால் 'என்ன' என்று கேள்வி மல் கேள்வி போடுகிறார்கள்? அதுதான் இரண்டு வருடத்திற்கு முன்னரே 'சுதந்திரம்' பெற்றுவிட்டதே என்று கேட்கிறார்கள்! ஒரு நாடு, புது அரசியலமைப்புடன் இயங்கப்போகிறது. புதுத் திட்டத்துடன், புதுச் சட்டங்கள் நம்மை ஆளப் போகின்றன என்ற சங்கதிகள் மக்களுக்குத் தெரியப்படுத்தப்படவில்லை' என்று விளக்கிக்கூறி, இந்த நிலைமைகளை எல்லா விஷயங்களையும், எடுத்து மக்களுக்குச் சமர்ப்பிக்கும் திருப்பணியைச் செய்து வருவதுதான் திராவிட முன்னேற்றக் கழகத்தின் நோக்கம் என்று குறிப்பிட்டு, "திராவிட முன்னேற்றக் கழகம், ஒரு நடமாடும் பல்கலைக் கழகம்" என்று கூறியதோடு, மாகாண மந்திரி சர்க்காருக்கிடையிலே விரிந்துவரும் வேற்றுமைகள் இரண்டு இடத்திலும் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடிக்கான காரணங்கள், ஆகியவைகளைப்பற்றி விளக்கமாக தக்க புள்ளி விவரங்களுடன் நீண்ட நேரம் பேசினர்.

கருணாநிதி

அடுத்துதோழர் மு கருணாநிதி ஆற்றிய சொற்பொழிவுரை.

தலைவர் அவர்களே!
தோழர்களே!

கடந்த ஆறுமாதங்களுக்கு முன்பு திராவிடர் கழகத்தின் சார்பில் இந்த ஊரில் அடிக்கடி பேசிவந்த நான், இன்று திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் பொங்கல் விழா பொதுக்கூட்டத்தில் பேசுகிறேன். இந்த மாற்றத்திற்குக் காரணங்களை நீங்கள் பத்திரிகை வாயிலாகவும், இதற்குமுன் நடந்த கூட்டங்களிலும் தெளிவுறத் தெரிந்திருப்பீர்கள்.

பொங்கல் விழா உழவரின் திருநாள் மட்டுமல்ல, தமிழரின் ஆண்டுத் துவக்கநன்கூட! பாட்டாளி சிந்திய வியர்வைத்துளிகள் நெல்மணிகளாக மாறி பரவசமளித்திடும் இந்தப் புதுநாள்...நாட்டில் புகுந்து நர்த்தனமாடும் பழமையுணர்ச்சிக்காரர்களால் இரையிடப்பட்டு, நம் கலாச்சாரம் தீபாவளிபோன்ற வீண் விழாக்களுக்குப் பலியிடப்பட்டுவிட்டது. தமிழரின் ஆண்டுக் கணக்கில் கோளாறும், கோணலும் மூளத்தொடங்கிவிட்டன 'காந்தியார் இறந்துபோன ஆண்டு எது?' என்ற கேள்வி இன்னும் மூன்னூறு வருடங்களுக்குப் பிறகு கேட்கப்பட்டால், ஆங்கில ஆண்டுக் கணக்குப்படி 1948 என்று சுலபமாகச் சொல்லி இறந்து எத்தனை வருடங்களாயின என்ற கணக்கிட்டுக் கொள்ளலாம். ஆரியம் நமக்கென வகுத்திருக்கிற அறுபது ஆண்டுக கணக்கின்படி - காந்தியார் இறந்தவருடத்தைமுன்னூறு ஆண்டுகளுக்குப் பிறகு சர்வசித்து வருடம் என்று சொன்னால், எத்தனை வருடங்களுக்கு முன் அவர் இறந்தார் என்று கணக்கிட முடியாது. தமிழனுடைய வரலாற்றுக்காலம் சரியாகக் கணிக்கப்பட முடியாமைக்குக் காரணமே, இந்த ஆரிய முறை ஆண்டுக் கணக்கால்தான்! இந்த ஆண்டுகளும் சாதாரணமானவையா? வசிட்டரோ, விசுவாமித்திரரோ கணித்ததா? இல்லை! நாரதர், நாரதியாக மாறி நந்தகோபாலனைக் கூடி பெற்ற பிள்ளைகள் அறுபது வருடங்களு. உண்மைபற்ற - உருப்படாத ஒரு முறை. நமக்கு ஆண்டு முறையாகஅமைந்துவிட்டது. திராவிடர் இயக்கம் செய்த புரட்சிகரமான செயல்களில் பொங்கல் நாள் திராவிடர் திருநாள் என்ற எண்ணத்தை அழியாத சித்திரமாக அமைத்ததும் ஒன்று!

இதுபோன்ற அரிய சாதனைகளை நம்மைத் தவிர வேறு யாரும் நாட்டில் செய்ததில்லை செய்ய நினைத்ததுமில்லை.

பொங்கலிலே பூரிப்புப் புன்னகையும் ஒருபுறத்தில் தவழ்ந்தேடினும்-ஒரு புறத்திலே வேதனைப்புயல் வீசிக்கொண்டுதானிருக்கிறது. சுதந்தர சர்க்காரிலே திருப்தி இல்லை. சர்க்கரை கிடையாது. வடநாட்டு 'சுகர் சிண்டிகேட்' நம் மீது கருணை காட்ட மறுக்கிறது. அரசாங்கமும் அதை அணுக அஞ்சுகிறது. ஏழை மக்கள் வாழ்க்கைத் தேவைக்கான பொருள்களின் விலையோ விஷம்போல் ஏறுகிறது. நம்மையாளும் சர்க்காரோ அல்லற்படும் ஏழைகளை, அவதிப்படும் தொழிலாளர்களைத் திரும்பிப் பார்க்கவும் மறுக்கிறது. கைத்தறி நெசவாளரின் கண்ணீர் - ராமநாதபுரம்மாவட்டத்திலே திருச்சித் தொழிலாளரின் திண்டாட்டம் இந்த நிகழ்ச்சிகள் ஆளவந்தாரின் நெஞ்சை ஈரமாக்கவில்லை.

ஜனவரி 26-ல் குடியரசு வருகிறதாம் 63 லட்ச ரூபாய் செலவில்-அருமையாகத் தயாரித்து-அமெரிக்க-பிரான்ஸ் நாடுகளைக் காப்பி அடித்து தயாரித்திருக்கிறோம். அரசியல் அமைப்பு என்று தம்பட்டம் அடிக்கிறார்கள். கம்யூனிஸ்டு கட்சியால் கண்டிக்கப்பட்டு - சோஷலிஸ்டுகளால் கிழித்தெறியப்பட வேண்டுமென்று சொல்லப்பட்டு - இந்து மகா சபையால் "இது சரியல்ல" என்று மதிப்புரை வழங்கப்பட்டு-திராவிட முன்னேற்றக் கழகத்தால் திட்டத்தின் அங்கங்கள் அலசப்பட்டு - வெதுக்கப்பட்டு - குடியரசுக் குழந்தை மருத்துவச்சிகளால் ஆயுதம் போட்டு எடுக்கப்படப்போகிறது ஜனவரி 26-ல்!

அமெரிக்காவையும் பிரான்சையும்-காப்பியடித்தார்களாம்! எதை! அந்த அமைப்பிலுள்ள வேண்டாதவைகளையெல்லாம்! குடியரசுத் தலைவர் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட மாட்டார், சர்வாதிகாரியாக இருப்பார். மாகாணங்களின் 'லகான்' அவர் கையிலே இருக்கும்.

ஜனவரி 26-க்குப் பிறகு பேச்சு உரிமை கூட நமக்கு இருக்காது.

இந்த நெருக்கடியான நேரத்தில்-திராவிட முன்னேற்றக் கழகம் செய்யவேண்டிய பணிகள் ஏராளம். அறப்போரில் நாம் பிரவேசிக்க வேண்டிய நேரம் நெருங்கிக்கொண்டிருக்கிறது

எதிரிகள் கண்டு அஞ்சுகிற அளவுக்கு நாம் வளர்ந்துவிட்டோம். திருச்சி மாநாடும், கிளைத்துள்ள 414 கிளைக் கழகங்களும், பலமான ஆந்திரப் பகுதிகளில் ஏற்படும் மறுமலர்ச்சியும் நம் வெற்றிக்குச் சான்றுகள்.

இந்தி எதிர்ப்பு, தடைமீற போன்ற செயல்களில் திராவிட முன்னேற்றக் கழகம் ஈடுபடும். அதற்கு ஆதரவு தர வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன். திருவாரூரைப் பொருத்தவரை தி. மு. கழகத்துக்குள்ள ஆதரவு கண்டு பெருமையடைகிறேன். தி. மு. க. செயற்குழுவின் பணிகண்டு பெருமிதங்கொள்கிறேன்." என்பதாகப் பேசி முடித்தார்.

செயலாளர் தோழர் டார் விசயராகவன் நன்றி கூறினார். கூட்டத் துவக்கத்தில் தோழர் சு. இராமனுதம் திராவிட [illegible] பாடினார் இரவு 9-[illegible] க்கு கூட்டம் இனிது [illegible] பெற்றது.

"மாலை மணி" விற்பனையாளர்களுக்கு

"மாலை மணி" விற்பனையாளர்கள் தங்களுக்கு அனுப்பப்பட்டிருக்கும் ஜனவரி மாத பட்டியல்படி தொகையை பிப்ரவரி 7-ந் தேதிக்குள் அனுப்பிவைப்பதோடு, பழைய பாக்கியையும் சேர்த்து அனுப்ப வேண்டுகிறோம். அனுப்பத்தவறும் தோழர்களுக்கு கண்டிப்பாக முன்னறிவிப்பின்றி பத்திரிகை நிறுத்தப்படும் என்பதை அறியவும்.

நிர்வாகி,
"மாலைமணி"

வரகு தானிய எண்ணெய் சத்தில் நஞ்சு!

சில வரகு தானியங்களிலுள்ள எண்ணெய்ச் சத்தில் விஷம் இருப்பதைப் பற்றியும், அவைகளை உட்கொள்ளுவதினால் மரணம் ஏற்படுவதைப் பற்றியும் கிண்டி கிங் இன்ஸ்டிடியூட் முன்னாள் தலைமை ஆராய்ச்சி வல்லுனர் தோழர் கே. வி. சுந்தரமும், இப்பொழுது அங்கு ஆராய்ச்சி நிபுணராயிருக்கும் கேப்டன் கே. நாராயணசாமியும் தொடர்ந்தாற்போல் சமீபத்தில் 'லெபாரட்டரியில்' ஆராய்ச்சிசெய்து வந்திருக்கின்றனர்.

தோழர் கே. வி. சுந்தரம், கேப்டன். கே. வி. நாராயணசாமி இவர்கள் கிங் இன்ஸ்டிடியூட் லெபாரட்டரியில் ஆராய்ச்சி செய்ததின் பேரில் 50 கிராம் தானியமானில் 1½ கிராம் எண்ணெய்சத்து விஷம் இருப்பதாகவும், அதை ஒருசாய் ஒரு உட்கொண்டால், சில மணி நேரம் கழித்த பின்னர் இறந்து விடுமென்றும் கண்டுபிடித்துள்ளனர். இத்துடன் சில வரகு தானியத்தின் எண்ணெய் சத்தின் விஷம் இருப்பது முதற் தடவையாக உலகிலே கண்டுபிடித்திருப்பதாகவும் கூறப்படுகிறது.

ஆனால் 100-க்கு 95 வரகு தானியங்களில் ஏற்படும் எண்ணெயில் விஷம் இல்லை. அவைகளைச் சேர்த்து உணவாகக் கருதலாமென்றும், 5 பங்கில்தான் விஷம் இருப்பதாகவும், இதைப் பற்றி ஒருவரும் பீதி கொள்ள வேண்டாமென்றும் தோழர் கே. வி. சுந்தரம் விளக்கிக் கூறினார்.

இப்பொழுது ஆராய்ச்சி நடத்தியதில், வரகு தானியத்தில் எது விஷம் உடையது, எது விஷம் இல்லாதது என்றுதான் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றது.

பிரிட்டிஷ் கடற்படை ஒத்திகை

லண்டன், பிப். 2— பிரிட்டிஷ் கடற்படை, மத்தியதரைக் கடல் கடற்படை இவைகளின் கூட்டு ஒத்திகை மார்ச்சு 20-ந் தேதி முதல் 22-ந் தேதி வரை நடைபெறவிருக்கிறது.

அறிவிப்பு

திருச்சி நகரக்கிளை:—திருச்சி நகரக் கிளையிலிருந்து உறுப்பினர் சேர்க்கும் புத்தகங்களை வாங்கிச் சென்ற கிளைக்கழகத் தோழர்களிடமிருந்து இன்னும் அடிக்கட்டை வந்து சேரவில்லை. ஆகையினால் உடனடியாக உறுப்பினர்களைச் சேர்த்து 15-2-50 தேதிக்குள் நகரக்கிளைக்கு அனுப்பிவைக்க வேண்டுகிறேன்.

எம். எஸ். மணி
செயலாளர், தி. மு. க. நகரக்கிளை

அன்பே உலகம் உய்ய வழியென ஆச்சாரியார் உபதேசம்

"அன்பு ஒன்றுதான் உலகம் உய்ய வழி, அன்பே மக்களின் மனத்திலுள்ள அழுக்குகளை அகற்றவல்லது. அவ்வித அன்பை நம்மிடையே உண்டு பண்ணவே மகாத்மா காந்தி அவதரித்தார்."

நாம் சுதந்திரமடைந்துவிட்டோம். நமது குடியரசையும் ஸ்தாபித்துவிட்டோம். இந்த சந்தர்ப்பத்தில் நம் நாட்டிற்கு தொல்லைகள் எதுவும் ஏற்படாதபடி காப்பாற்றவும், சுபீட்சம் அருளும்படியும் கடவுளைப் பிரார்த்திப்போம்."

இவை முன்னாள் கவர்னர் ஜெனரல் தோழர் ஆச்சாரியார் அவர்கள் சென்னையில் நடைபெற்ற பிரார்த்தனைக் கூட்டத்தில் திருவாய் மலர்ந்தருளிய கருத்துக்கள்.

அண்ணல் காந்தியாரின் அஹிம்சைக் கொள்கையை அனைவருக்கு எடுத்துக் காட்டும் நாளாகிய ஜனவரி 30-ல் இத்தகைய கருத்துக்களை ஆச்சாரியார் வெளியிட்டிருப்பது பொருத்தந்தான். ஆனால் இந்த அன்பு உபதேசம் எந்த அளவுக்கு இந்நாட்டிற்குப் பயன்பட்டது—பயன்பட்டு வருகிறது என்பது தான் நாம் கவனிக்க வேண்டிய விஷயம்.

அன்பு ஒன்றுதான் உலகம் உய்ய வழி. ஆம், உண்மைதான். இதே உண்மையைத்தான் புத்தர் கூறினார், இயேசு கூறினார். ஆனால் அதனைக் கூறிய அவர்களுக்குக் கிடைத்த பரிசு என்ன? புத்தர் மறைக்கப்பட்டார், இயேசு கொல்லப்பட்டார். எனினும் அன்று முதல் இன்றுவரை அன்பு உபதேசம் அதிலே உள்ள அம்பேசப்பட்டுதான் வருகிறது. அதே சமயத்தில் கொலைத் தொழிலும் தொடர்ந்து நடைபெற்றுதான் வருகிறது. அறத்தாற்றான் அன்பு ஆதரவளிக்கிறது என்று சொல்லுவதற்கில்லை. மறத்திற்கும் அதுவே என்றும் துணைபுரிந்து வருகிறது. அன்பே சிவம் என்று பேசித் திரியும் சைவ மெய்யன்பர்கள் அன்று சமணராக் கழுவேற்றிக் கொன்றனர், சமணரின் பச்சை இரத்தம் கழுமரத்தைக் கழுவியது கண்டு இருந்ததுதான் சைவ மெய்யன்பர்களின் அன்புப்பணியாக இருந்தது அன்று. ஏன், அவ்வளவு தூரம் போவானேன். காந்தியாரை சுட்டுக்கொன்ற கோட்சே கூட தனது செயலுக்கு ஒருவித அன்பைத்தான் அடிப்படையாகக்கொண்டிருந்தான். இந்து மதத்திலே அவன் கொண்டிருந்த அன்புதானே காந்தியாரைக் கொலைசெய்தது!

இப்படிப் பார்த்துக்கொண்டே போனால், ஆக்கவேலை அழிவுவேலை ஆகிய இரு வேலையையும் செய்ய வல்லதாயிருக்கிறது அன்பு. அவரவர் தத்தம் செயலுக்கேற்ற வண்ணம் அன்புக்குப் புதுப்புது தத்துவங்களைக் கற்பித்துக்கொண்டிருக்கின்றனர்.

இங்ஙனம் ஒருபுறம் அன்பின் உயர்வு, சிறப்பு முதலியனபற்றிய உபதேசமும், மற்றொருபுறம் அதே அன்பின் காரணமாக அடாத செயல்களும் நடந்துகொண்டிருக்கும் நிலைமையிலேதான் இந்த அன்பு. அன்பின் சரியான தத்துவம் என்ன என்பதை தனியாக விளக்கப்படவேண்டும். இன்று ஆச்சாரியார், தேசிய தலைவர்களோ சம்பிரதாயத்துக்காக அன்பைப்பற்றிய உபதேசங்கள் இனி பயன்படா. அத்தகைய உபதேசம் உலகை உய்வழி காட்டியதாகாது.

எனவே, எங்கும் என்றும் அன்பு நிலைவேண்டுமானால் மக்கள் அனைவரும் இன்புற்றிருக்க ஒருபொது வழியைக்கண்டுபிடித்தாகவேண்டும். அங்ஙனம் ஒரு பொதுவழியைக் கண்டுபிடித்தால்தான், அரசியலும் பொருளியலும் சம்மூன்றும் தோன்றும். பொருளாதார சமத்துவம் ஏற்படும் வண்ணம் அரசியலைமாற்றியமைத்துவிட்டால், உலகின் மக்களின் அடிப்படைத் தேவைகள் பூர்த்திசெய்யப்பட்டுவிடும். அப்படிப்பட்ட நிலையிலே இயல்பாகவே குரோதம் அழிந்தொழியும். அன்பு நிலை எழுப்பும். ஆகவே அன்பு நிலைவேண்டுமானால் அரசியல் ஒழுங்குபட வேண்டும். அதாவது சமதர்ம அரசியல் அமையவேண்டும். சாண்டேல் என்கிற தனி ஆள் எந்த உருவத்திலும் இருக்கக் கூடாது. இப்பிரான்மை பொறுக்கவொண்ணில் தென் ஆட்டை மகாடு சான்றிரை ஒழியவேண்டும். அம்பொழுதான் நாட்டில் அன்பு நிலவும். ஆட்சியும் நிலைக்கும். இதைவிடுத்து "நாட்டில் தொல்லைகள் ஏதும் ஏற்படாமல் காக்க ஆண்டவன் அருள்புரிவானாக" என்று சொர்ந்த[illegible]தால் பயனில்லை.

தி. மு. க. அமைப்புக் குழுச் செயலாளரின் முக்கிய அறிவிப்பு

1. திருச்சி மாநாட்டிலே நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கேற்ப உறுப்பினர்கள் சேர்க்கும் பணியைத் துரிதப்படுத்தி, இம்மாத முடிவுக்குள் எல்லா மாவட்டங்களுக்கும் கொடுக்கப்பட்டுள்ள இரசீது புத்தகங்களைத் தொகையுடன் தலைமை நிலையத்திற்கு அனுப்புமாறு கேட்டுக்கொள்கிறேன்.

2. மாவட்டக் கழகங்கள் அமையாத பகுதிகளில், அங்கந்த அமைப்பாளர்கள் உடனே மாவட்டக் கழகம் அமைக்கும் ஏற்பாட்டினைச் செய்ய வேண்டுகிறேன்.

3. மாவட்டக் குழு அமைக்கப்படாத எந்த மாவட்டங்களிலும், மாவட்ட மாநாடுகள் நடத்த முற்படுதல் கூடாது என்பதை நினைவூட்டுகிறேன்.

4. மாவட்ட அமைப்பாளர்கள், அல்லது செயலாளர்கள் மூலமாக மட்டுமே சிற்றூர்களுக்கு இரசீது புத்தகங்கள் அளிக்கப்படும்.

கழகத் தோழர்கள், அன்பு கூர்ந்து பொதுச் செயலாளர், கணியூர் மாநாட்டிலே எடுத்துக் காட்டியபடி மேற்கண்ட ஆக்க வேலையில் தீவிரமாக ஈடுபட வேண்டுகிறேன்.

என். வி. நடராசன்
செயலாளர், அமைப்புக்குழு
தலைமை நிலையம்

இனி நடப்பவை

மன்னார்கோயில் :— இவ்வூர் தி. மு. க. கிளையின் துவக்க விழா, 5-2-50 ஞாயிறு மாலை 5 மணிக்கு பெரியார் திடலில் நடைபெறும். தோழர்கள் எம். எஸ். சிவசாமி, எம். எஸ். இராமசாமி, இரா. கு. தங்கப்பழம் தோழியர் இராமாமிர்தத்தம்மையார் ஆகியோர் சொற்பொழிவாற்றுவர்.

* * *

பெங்களூர் :—பெங்களூர் சிடி தி. மு. க. கிளையின் செயற்குழுக் கூட்டம், 5-2-50 ஞாயிறு மாலை 5-30 மணிக்கு கலாஸ்பாளையம் மெயின்ரோடு 5-4 என்னுள்ள கட்டிடத்தில் நடைபெறும்.

* * *

அரங்கல்துருக்கம்— இவ்வூர் தி. மு. கழக சார்பில் 4-2-50 சனி யன்று எருதுவிடு விழாவும் அன்று மாலை 5 மணிக்கு பொதுக்கூட்டமும் நடைபெறும். தோழர்கள் சி. பி. சிற்றரசு, ஆர். இரங்கசாமி ஆகியோர் சொற்பொழிவாற்றுவர்.

* * *

திருச்செங்கோடு :— இவ்வூர் தி. மு. க. உறுப்பினர்களின் கூட்டமொன்று, 5-2-50 ஞாயிறு மாலை 6 மணிக்கு வைத்தியசாலை மேல் மாடியில் நடைபெறும். "கழகமும், நமது கடமையும்" என்பது பற்றி பல தோழர்கள் சொற்பொழிவாற்றுவர்.

* * *

கோவை:—5-2-50 ஞாயிறு காலை 10 மணிக்கு நகர தி. மு. கழகக் கட்டிடத்தில் சொற்பயிற்சிக் கூட்டம் நடைபெறும். அதுபோது "ஜமீன் ஒழிப்பு சட்ட திட்டங்கள்" பற்றி விவாதம் நடைபெறும்.

* * *

தூத்துக்குடி:—வடக்கூர் அழகிரிசாமி ஞாபகார்த்த முன்னேற்றக் கழகத்தின் சார்பில், 5-2-50 ஞாயிறு மாலை 7 மணிக்கு ஓர் பொதுக்கூட்டம் நடைபெறும். தோழர் டி. பி. ஜோதி தலைமையில் தோழர்கள் எம். இரத்தினம் எஸ். என். ராஜன், ஜி. பி. நெல்சன், வி. எம். ராஜன் ஆகியோர் சொற்பொழிவாற்றுவர்.

* * *

திருப்பத்தூர்:—(வ. ஆ) இவ்வூர் தி. மு. க. கிளையின் சார்பில் 5-2-50 ஞாயிறு மாலை 7 மணிக்கு பஞ்சாலை மைதானத்தில் ஓர் பொதுக்கூட்டம் நடைபெறும். மல்லைக்கொம்பைத் தோழர் எம். பி. வடிவேலு தலைமையில் தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ. தோழியர் சத்தியவாணிமுத்து ஆகியோர் சொற்பொழிவாற்றுவர்.

* * *

திருவின்னகரூர் (நாசர் புரம்,— இவ்வூர் சித்த ஆராய்ச்சிக் கழகத்தின் சார்பில் சித்தவைத்திய நிலையத்தில் 4—2—50 சனி மாலை 5 மணிக்கு ஓர் பொதுக்கூட்டம் நடைபெறும். சென்னை சித்த வைத்தியப்பேரறிஞர் தோழர் எம். சீனிவாசராவ், சொற்பொழிவாற்றுவார். தோழர் தேவதாஸ் பி. ஏ. எல். டி., எம். எ. எஸ். சி. தலைமை வகிப்பார். வித்வான் பி. சம்பந்தனார் வைத்தியக் கொடியேற்றுவார்.

* * *

திருச்சி :—அகில தமிழ்நாட்டு ஹோமியோபதியர் மாநாடு, 5-2-50 ஞாயிறு பிற்பகல் 1 மணிக்கு, திருச்சி, இருதயபுரம் பொன்னையா உயர்நிலைப் பள்ளி கட்டிடத்தில் நடைபெறும். டாக்டர் ம. சந்திரசேகரம் தலைமை வகிப்பார். டாக்டர் வி. ஆர். மூர்த்தி மாநாட்டைத் துவக்கி வைப்பார்.

* * *

வேலூர்:—வேலூர் கல்லூரித் தமிழ்ச் சங்கத்தில் 4-2-50 வெள்ளி மாலை 6 மணிக்கு, தமிழ் விரிவுரையாளர் தோழர் செல்லப்பன் அவர்கள் தலைமையில் தோழர் இரா. நெடுஞ்செழியன் எம். ஏ., அவர்கள் சொற்பொழிவாற்றுவார்கள்.

ஆய்ஸ்டர்களை கொல்லாமல் முத்து எடுக்கும் முறை

நியூயார்க், பிப். 2—

முத்துகளைத் தரும் ஆய்ஸ்டர் பூச்சிகளிலிருந்து முத்துகளை எடுக்க, இப்பொழுது கையாளப்படும் முறையில் பெரும்பாலும் இப்பூச்சிகள் இறந்து விடுகின்றன. ஆய்ஸ்டர்கள் சாகாமல் அவைகளிலிருந்து முத்துகளை எடுக்க, இப்பொழுது புது வழி கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது.

ஆய்ஸ்டர் பூச்சிகளை அனஸ்தேடிக் என்ற மயக்க மருந்தால் மயக்க எடுத்தால் அவை மயக்கித் தூங்கி விடுகின்றனவாம். அப்பொழுது முத்துக்களை எடுப்பதால், அதன் உயிருக்குத் தீங்கு விளைவதில்லை.

சிதம்பரத்தில்

6-2-50 திங்கள் காலை 7-மணிக்கு
தோழர்
சி. என். அண்ணாதுரை
அவர்கள் தலைமையில்
நந்தகோபாலன் — — சரசுவதி
திருமணம் நடைபெறும்

முருகு. சுப்பிரமணியன்,
அரு. பெரியண்ணன், மதியழகன்,
இளங்கோ, அரங்கண்ணல்
ஆகியோர் பேசுவர்.

தோழர்கள் இதனையே அழைப்பாகக் கருதவேண்டுகின்றேன்.

அன்பன்,
தில்லை—வில்லாளன்.

தி. மு. கழகக் கூட்டங்கள்

4—2—50

அரங்கல்துருக்கம்: —	சி. பி. சிற்றரசு, ஆர். இரங்கசாமி.
மாயவரம் :—	க. அன்பழகன், என். வி. நடராசன்.

5—2—50

திருப்பத்தூர் (வ. ஆ.)	இரா. நெடுஞ்செழியன், சத்தியவாணிமுத்து. எம். பி. வடிவேலு.
திருவண்ணாமலை: —	ஈ. வெ. கி. சம்பத், என். வி. நடராசன், சி. பி. சிற்றரசு, ஏ. வி. பி. ஆசைத்தம்பி.
கும்பகோணம்: —	கே. சே. நீலமேகம், க. அன்பழகன், கே. ஏ. மதியழகன், இளவழகன், (தி. மா மு. க.)
வடக்கூர் தூத்துக்குடி) :—	டி. பி. ஜோதி, எஸ். என். ராஜன், ஜி பி நெல்சன். வி. எம். ராஜன எம். இரத்தினம்,

திருப்பத்தூர்—(வ ஆ) முனிசிபல் உயர்நிலைப் பள்ளி மாணவர் கழக ஆண்டு விழா, 5—2—50 மாலை 4 மணிக்கு, நடைபெறும். அதுபோது, தோழர்கள் இரா. நெடுஞ்செழியன் எம். ஏ, சபூர் பி. ஏ. (ஆனர்ஸ்) நா. இளங்கோ பி. எஸ். சி, ஆகியோர் சொற்பொழிவாற்றுவர். அன்று இரவு நாடகம் ஒன்று நடிக்கப்பெறும்.

* * *

சென்னை :— "சோஷியல் பிரண்ட்ஸ் கிளப்"பின் பொதுத் தேர்தலும், நிர்வாகிகள் தேர்தலும் 5-2-50 காலை 10 மணிக்கு நடைபெறும். இடம்:—52, வெங்கட்ராமய்யர் தெரு, சென்னை.

* * *

சென்னை:—தோழர் சந்திரசேகரன்-தோழியர் சரோசா திருமணம், 5-2-50 காலை 9 மணிக்கு, தோழியர் இந்திராணி பாலசுப்ரமணியம் தலைமையில், தம்புசெட்டி வைத்தியநாத முதலித் தெரு 5 என்னுள்ள இல்லத்தில் (சினிமா சென்ட்ரல் அருகில்) நடைபெறும். தோழர் சி. என். அண்ணாதுரை எம். ஏ. சொற்பொழிவாற்றுவர்.

* * *

சென்னை:—தோழர் பச்சையப்பன் — தோழியர் பிச்சையம்மாள் திருமணம், 5—2—50 ஞாயிறு காலை 7 மணிக்கு சென்னை புதுமனைக்குப்பம் மூன்றாவது வீதியில் தோழர் என். ஜீவரத்தினம் தலைமையில் நடைபெறும். அறிஞர் கா. அப்பாத்துரை, தோழர் சண்முகனார், தோழிமார்கள் சத்தியவாணிமுத்து, ஆர். கிருஷ்ணாபாய் அம்மையார் ஆகியோர்வாழ்த்துரை வழங்குவர்

குடந்தை தி மா. மு. கழகத் துவக்கவிழா

கும்பகோணம் திராவிட மாணவர் முன்னேற்றக் கழகக் கிளையின் துவக்கவிழா, 5—2—50 ஞாயிறு காலை 9 மணிக்கு போர்ட்டர் நகர மன்றத்தில் (Porter Town Hall) நடைபெறும். தலைவர் தோழர் கே. கே. நீலமேகம். வரவேற்பாளர்:— தோழர் இளவழகன். துவக்குபவர்:— தோழர் கே. ஏ. மதியழகன் பி. ஏ, சொற்பொழிவாளர்:- க. அன்பழகன் எம். ஏ.

வள்ளுவர் விழா

அன்று மாலை 5 மணிக்கு மேற்படி கழகச் சார்பில் "வள்ளுவர் விழா" கொண்டாடப் பெறும். தலைவர் தோழர் ஏ. பரஞ்சோதி. வரவேற்பாளர் தோழர் மா. மாணிக்கவாசகம்; துவக்குபவர்-தோழர் கா. சொக்கலிங்கம்; சொற்பொழிவாளர்கள்; தோழர்கள் கே. கே. நீலமேகம், க. அன்பழகன் எம். ஏ., கே. ஏ. மதியழகன் பி. ஏ.

இடம் :—காங்கேயன் காந்தி பூங்கா. குறிப்பு:—காலை, மாலை நிகழ்ச்சிகளில் தோழர் கே. ஏ. பி. விசுவநாதம் அவர்கள் பெரிதும் கலந்துகொள்வாரென எதிர்பார்க்கப்படுகிறது

தேவை !

நமது "மாலைமணி"யை விற்பனை செய்வதற்கு, கீழ்கண்ட இடங்களுக்கு முன்பணம் கட்டக் கூடிய விற்பனையாளர்கள் தேவை.

திருவாரூர்
கும்பகோணம்
திருவண்ணாமலை
காட்டுமன்னார்கோயில்
பெரியகுளம்

Printed & Published by T M Parthasarathy at the Mercantile Press, 2/45, Muthumari Chetty Street, Madras-1